Register No. | | | | | | | | |

# FA7D

**5051–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

## ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the law relating to judicial control of discretionary powers.

நிர்வாகத்தின் உளத்தேர்வு அதிகாரத்தின் மீது நீதிமன்றங்களின் கட்டுப்பாடுகள் பற்றிய சட்டக் கூறுகளை விவாதிக்க.

2. "The rule of non enforceability of administrative directions is very well established". – Explain, pointing out the exceptions if any.

''நிர்வாக முறை ஏவுரைகளைச் செயலுறுத்தாமைப் பற்றிய விதி மிக நன்றாக நிலைநிறுத்தப்பட்டு விட்டது'' - விளக்கவுரையுடன் விதிவிலக்குகள் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுக.

3. Discuss rule of law with specific reference to modern concept of rule of law.

சட்டத்தின் ஆட்சியி என்பதை அதன் நவீனகாலக் கருத்தமைவினை எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்கவும்.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the parliamentary control of delegated legislation.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு குறித்தான நாடாளுமன்றக் கட்டுப்பாட்டை விளக்கிக் கூறுக.

5. Explain administrative tribunals. Discuss with decided case laws whether appeals can be filed in the High Court against the decision of the State Administrative Tribunal.

நிர்வாகத் தீர்ப்பாயங்களை விளக்கவும், மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பில் இருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய இயலுமா என்பது குறித்து தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்க வும்.

6. Explain the historical development of the ombudsman system. Discuss how far it is applicable in India.

ஆம்ப்புட்சுமேன் முறையின் வளர்ச்சி குறித்த வரலாற்றை விளக்கி, இந்தியாவில் அதன் பயன்பாட்டை விவாதிக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Sovereign function.
இறைமைச் செயல்.

(b) Henry VIII Clause.
ஹென்றியின் எட்டாவது விதி.

(c) Speaking order.
பேசும் ஆணை.

(d) Laches.
காலதாமதம்.

(e) Droit-Administratif.
ட்ராயட் அட்மின்ஸ்டிரேட்டிப்.

(f) Right to personal hearing.
நேரடி விசாரணைக்கான உரிமை.

(g) Res judicata in administrative decisions.
நிர்வாகத் தீர்ப்புகளில் மறுதீர்ப்புத் தடை.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A student was permitted to write University examination at the end of the course. The University cancelled his examination on the ground that he was admitted to the examination in spite of shortage of attendance. The student approached the High Court. Decide.

மாணவர் ஒருவர் படிப்பு முடிந்து நடைபெறும் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டார். அவர் வகுப்பிற்குப் போதிய வருகை புரியாததால் அவர் எழுதிய பல்கலைக்கழகத் தேர்வை, பல்கலைக்கழகம் ரத்து செய்து விடுகிறது. அம்மாணவர் உயர்நீதிமன்றத்தினை அணுகினார். முடிவு காண்க.

9. A, is the executive magistrate. He has got the authority to take disciplinary action against his subordinates. B is the junior assistant working under him. He conducts an enquiry against him. When nobody comes forward to depose against B, A himself stands up from his seat and gives evidence against him. Then he himself records the evidence. Advise B.

'A' ஆட்சித்துறை நடுவராவார். அவருக்குக் கீழ் பணிபுரிபவர்கள் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் உள்ளது. 'B' அவர் கீழ் பணிபுரியும் இளநிலை உதவியாளராகும். 'B' மீது 'A' ஒழுங்கின்மை குறித்து விசாரணை நடத்துகின்றார். 'B' க்கு எதிராகச் சாட்சியம் அளிக்க எவரும் முன்வராத பொழுது, 'A' அவரது இருக்கையில் இருந்து எழுந்து 'B' க்கு எதிராக சாட்சியம் அளிக்கிறார். பின்பு அதனைப் பதிவு செய்கிறார். இது குறித்து 'B' க்கு ஆலோசனை வழங்கவும்.

10. The Goondas Act authorises the state 'A' to detain any person whose presence in the society is dangerous to public order. The executive magistrate passes a detention order against 'B' under the Goondas Act, stating that his presence is dangerous to law and order. Decide the validity of the order.

'A' என்ற மாநிலத்தின் குண்டர்கள் சட்டம் பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்துகிறவர்களை தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் அளிக்கின்றது. 'B' என்பவரின் செயல்பாடு சட்டம் ஒழுங்கிற்கு பாதிப்பு ஏற்படுத்துவதால் குண்டர்கள் சட்டத்தில் தடுப்புக்காவலில் ஆட்சித்துறை நடுவரால் வைக்கப்படுகிறார். இச்செயலின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

---